පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்

UNIVERSITY OF PERADENIYA
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

පළමු වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)
අප්‍රේල් 2017
முதலாம் வருட கலைத்தேர்வு பரீட்சை ( வெளிவாரி - புதிய பாடத்திட்டம்)
ஏப்ரல் 2017
1st YEAR (100 LEVAL) EXAMINATION IN BACHELOR OF ARTS
(EXTERNAL - NEW SYLLABUS) APRIL 2017

# SUPE 014
# Writing Skills in Tamil

(இவ்வினாத்தாளில் ஏழு வினாக்கள் உள்ளன.
முதலாம் பகுதியில் உள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும் மூன்றாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.)
எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்

நேரம்: மூன்று மணித்தியாலம்

---

## பகுதி I

**01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

(அ) உலகமயமாதலும் தாய்மொழிக் கல்வியும்
(ஆ) இலத்திரனியல் ஊடகங்களில் மொழி
(இ) விண்வெளிப்பயணங்களும் சூழல்மாசடைதலும்
(ஈ) ஒழுக்கம் விழுப்பம் தரும்
(உ) 'பெண்மையை உயர்வு செய்'

**02. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

பத்திரிகையை மக்கள் வாசிப்பது ஏன்? புதினங்களை அறிந்துகொள்ள விளைவது மக்களுடைய இயல்பு. அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு முதலான துறைகளில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். அன்றைய கட்டத்தில் கவனத்திற்கு உரியவை என்று கருதப்படுகின்ற தகவல்களை மற்றவர்கள் அறிந்துகொள்வதற்கு முன் தாங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

முக்கியமான ஒரு செய்தி பற்றி மற்றவர்கள் பேசும்போது அதைத் தாங்கள் அறிந்திருக்காதவிடத்து அந்தப்படுகிறார்கள். அது பற்றித் தங்களுக்கு ஏலவே தெரியுமென்று காட்டிக்கொள்ளக்கூடியவிடத்து ஆறுதல் அடைகிறார்கள். அந்தச் செய்தி பற்றிய மேலதிக விபரங்களையோ, பின்னணியையோ அறிந்திருந்தால் அவற்றையெல்லாம் அலசிப் பெருமிதமடைகிறார்கள். கவரப்பட்ட செய்தியின் தொடர்ச்சி (Follow –up) வெளிவராதபோது ஏமாற்றத்துக்குள்ளாகிறார்கள். தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதிலும் புரியாத ஒன்றைப் புரிந்துகொள்வதிலும் மகிழ்ச்சியடையும் மனிதர் அறிவினை வளர்க்கும் ஒன்றாகவும் பத்திரிகையைப் பார்க்கிறார்கள். எமது அறிவு, மொழி, இலக்கியம், பண்பாடு, தேசியம் இன்னோரன்னவற்றின் வளர்ச்சியில் பத்திரிகையின் பங்களிப்பு எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துவிளக்க வேண்டியதில்லை. எங்கள் மாணவர்களிடையே மொழியைக் கையாளும் திறன் குறைந்து வருவதாக ஓர் அவையில் சமீபத்தில் கலந்துரையாடிக் கொண்டிருந்த அறிஞர் பலர், அவ்விடயத்தில் பத்திரிகைகள் கூடிய கவனத்தோடும் பொறுப்புணர்வோடும் செயற்பட்டால் நிலைமை சீர்திருந்த அது உதவும் என்று அபிப்பிராயப்பட்டனர். சாஸ்திரிய சங்கீதத்தை ரசிக்கக்கூடியவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது என்று குறைபட்டபோது, ‘அப்படியென்றால், அதனை ரசிக்கக் கூடியவர்களை நாங்கள் சிருஷ்டிப்போம் என்று ஒரு பத்திரிகையாசிரியர் நம்பிக்கையளித்தது நினைவுக்கு வந்தது. அறிவு வளர்ச்சிக்குப் பத்திரிகை பங்களிக்க வல்லது. பத்திரிகைகள் முதலில் மக்களுக்குக் கல்வி புகட்டுவனவாகவும் சமகால வரலாற்றோடு அவர்களைப் பரிச்சயப்படுத்துவனவாகவும் அமையவேண்டும் என்பதைச் சிறந்த ஒரு பத்திரிகையாளராக விளங்கிய மகாத்மா காந்தி வலியுறுத்திக் கூறியுள்ளார். அறிவினை வளர்ப்பதிலும் பகிர்ந்து பரப்புவதிலுமான ஆர்வமே மனிதனை ஏனைய விலங்குகளினின்றும் வேறுபடுத்துவது; மனித நாகரிக வளர்ச்சிக்கு ஆதாரமானது. ‘மெய்ப் பொருள் காண்பது அறிவு’ என்பர் திருவள்ளுவர். மெய்யை, உண்மையைத் தேடிக் காண்பது குறித்தும் பத்திரிகையுலகில் மிகுதியாகப் பேசவும் விவாதிக்கவும் படுவதுண்டு.

**03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மனித மொழியினை மிருகங்களும், பறவைகளும் கைக்கொள்ளும் குறியீட்டுமுறைத் தொடர்புடனே ஒப்பிட முடியாது. ஏனெனில் அவற்றின் ஒலி குறியீடுகள் ஆக்கத் தன்மையற்றவனாகும். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஏற்ற தூண்டுதல்களினாலே அவை ஏற்படுவனவாகும். உணவைக் கண்டு தன் இனத்திற்குத் தெரிவித்தல், நெருங்கிவரும் அபாயத்தைக் கண்டு அல்லது உணர்ந்து பிறவற்றுக்கு அறிவித்தல், எதிர்ப்பாலுடன் சேர விரும்புதல் போன்ற உயிரியல் வயப்பட்ட தூண்டுதல்களால் அவை ஒலிக் குறியீடுகளை உண்டாக்குகின்றன. இத்தகைய ஒலிக் குறியீடுகளாலேயே மிருகங்கள் பறவைகள்

ஆகியன தத்தம் இனங்களுடன் கருத்துத் தொடர்பு கொள்ளுகின்றன. இக்கருத்துத் தொடர்பு மிகக் குறுகிய சில குறியீடுகளாலேயே நடைபெறுகின்றது. வாழைப்பழத்தை விரும்பி உண்ணுங்கிளி, அவ் வாழைப் பழத்தைப் பற்றி வர்ணிக்கவோ அதனை உண்டதனால் ஏற்பட்ட சுவையைச் சொற்களினாற் கூறவோ வன்மையற்றதாயுள்ளது. நான்கு அல்லது ஐந்து வருடங்களாக வீட்டில் ஒரு கிளியை வைத்திருந்தாற் கூட அக் கிளிக்கு அத்தகைய ஆற்றல் ஏற்பட்டு விடாது. ஆனால் ஐந்து வயதுடைய எம்முடைய குழந்தையினை இச் சந்தர்ப்பத்திலே எண்ணிப் பாருங்கள். மிருகங்கள், பறவைகள் போலவே அவனோ, அவளோ, அச்சம், நோ முதலிய உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த 'ஆ', 'ஐயோ', 'ஊ', 'ம்ம்' போன்ற ஒலிக் குறியீடுகளை ஏற்படுத்தினாலும், தான் உண்ட வாழைப் பழத்தினைப் பற்றியும் அதன் சுவையினைப் பற்றியும் பல சொற்களாலே கதையளக்கக் கூடியவனாக அல்லது கதையளக்கக் கூடியவளாக உள்ளனர். மனிதன் மொழியினைக் கருவியாகக் கொண்டு சென்ற காலத்துப் பழமையினையும், நிகழ்கால நடைமுறைகளையும், எதிர்கால நிகழ்வுகளையும் பற்றியெல்லாம் பேசக் கூடியவனாயுள்ளான். தன் புலன்களால் உணரப்படாத விடயங்களுக்கும் அதன் பொருள் தெரிந்தவனாக இருக்கிறான். நடக்கமுடியாத விடயங்கள் பற்றி மொழி கருவியாகப் பொய் கூறவும் வல்லவனாயுள்ளான். மிருகங்களாலோ பறவைகளாலோ இச் சாதனையைச் செய்யமுடியாது.

(அ) இவ்வுரைப் பகுதியின் பிரதான கருத்து யாது?

(ஆ) மிருகங்கள், பறவைகள் என்பவற்றின் தொடர்பாடல் திறன் பற்றிக் கட்டுரையாசிரியர் கூறுவது யாது?

(இ) மனிதமொழியின் சிறப்புக் கூறுகள் யாவை?

(ஈ) உரைப்பகுதியின் கருத்தைச் சுருக்கி இருபத்தைந்து சொற்களில் எழுதுக.

**அல்லது**

**மேல்வரும் கவிதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தீர்த்தக் கரையினிலே – தெற்குமூலையில்
செண்பகத் தோட்டத்திலே,
பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்றுசென்னாய்
வார்த்தை தவறிவிட்டாய் - அடிகண்ணம்மா!
மார்பு துடிக்குதடீ
பார்த்த விடத்திலெல்லாம் - உன்னைப்போலவே
பாவை தெரியுதடி!

மேனி கொதிக்குதடீ – தலைசுற்றியே

வேதனை செய்குதடீ

வானி லிடத்தையெல்லாம் - இந்தவெண்ணிலா

வந்து தழுவதுபார்

மோனத் திருக்குதடீ - இந்தவையகம்

மூழ்கித் துயிலினிலே

நானொருவன் மட்டிலும் - பிரிவென்பதோர்

நரகத் துழலுவதோ?

அ) இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி யாது?

ஆ) அந்த உணர்ச்சி எவ்வாறான செயற்பாடுகளை விளைவிக்கிறது எனக் கவிஞர் கூறுகிறார்?

இ) காதலி மீதுள்ள நெருக்கமான ஈடுபாட்டை வெளிப்படுத்தக் கவிஞர் கையாண்டுள்ள தொடர்களைக் குறிப்பிடுக?

ஈ) ‘பிரிவென்பதோர் நரகம்’ என்பதில் கவிஞரின் கவிதையாக்கத் திறன் வெளிப்படுமாற்றை விளக்குக?

## பகுதி II

4. **பின்வரும் வாக்கியங்களில் தேவையான இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டுத் திருப்பி எழுதுக.**

ஆ). அப்பா சொன்னார் அவர்கள் நம் முதலாளி இந்தத் தோணி எல்லாம் அவருடையதுதான் நாம் மீனைப் பிடித்து அவருக்குத்தான் கொடுக்கவேண்டும்

ஆ). அறிவிப்பு நடையின் முக்கிய பண்புகள் பின்வருவன விளக்கம் தெளிவு பயன்பாடு

இ). நாங்கள் செய்ய நினைத்த திட்டங்களில் சில முன்னேற்றங்கள் சில பின்னடைவுகள் சில எதிர்பாராத வெற்றிகள் இருந்தன

ஈ) ஐயா என்ன இந்தப் பக்கம் என்று மாணவன் கேட்டான்

உ) பேராசிரியர் வி செல்வநாயகம் 1907 1972 இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலக்கிய விமர்சனம் வளர்வதற்கான அடித்தளத்தை இட்டார்

ஊ) இருபதாம் நூற்றாண்டில் இவர்கள் நவீன உலகச் சிற்பிகள் எனச் சிறப்பிக்கப்பட்டார்கள்

எ) தமிழுக்கு அமுதென்று பேர் எனத் தொடங்கும் பாடலைப் பாரதிதாசன் இயற்றினார்

ஏ) நிலைபேறுடைய உண்மை Truth அழகு Beauty செம்மை Goodness என்னும் இவற்றையே அறிஞரது உள்ளம் என்றும் அவாவிநிற்கும்

ஐ) கடந்த வருடம் வெள்ளிக்கிழமை மே 15 காலையில் இந்த நிகழ்ச்சி நடந்தது

ஒ) சுவாமி விபுலானந்தர் பேராசிரியராக விளங்கினார் பத்திரிகையாசிரியராகத் திகழ்ந்தார் ஆய்வாளராகச் செயற்பட்டார் கவிஞராகத் துலங்கினார்

5. **பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் திணை, பால், எண், இடம், புணர்ச்சி என்பவற்றின் பிழைகளைச் சுட்டிக்காட்டி, வாக்கியங்களை மீள எழுதுக.**

1. இலங்கையில் மோசமான மனிதர்களைப் பாதிக்கும் ஆட்கொல்லியாக டெங்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.
2. நல்ல புத்தகங்கள் அறிவு விருத்திக்கு மட்டுமன்றி, மனதைச் செம்மைப்படுத்தவும் உதவுகின்றது.
3. ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால் கிராம சேவகர் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று வாக்காளர் அட்டைகளைக் கொடுத்தார்.
4. புதிய பல்கலைக்கழகத்தினுள் நுழையும் மாணவர்கள் பகிடிவதை என்னும் பெயரில் இம்சைப்படுத்தப்படுகிறார்கள்.
5. நவீனத் தமிழ் கவிதை வளந்திருக்கிறது
6. ஆண்டு தோறும் மறைந்த அசோகமித்திரன் நினைவாக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்படும்.
7. போரின் கொடூரத்தைக் கண்டு உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் உணர்ச்சிகள் சரியானதாக அல்லது பிழையானதாக இருக்கலாம்.
8. பாராளுமன்றம் முன் சிறுபான்மை இனக் கட்சிகள் சத்தியாக்கிரகம்

9. வாக்கிய அமைப்பிலும் சிக்கலான ஒரு கருத்தை எளிதாகவும் தெளிவாகவும் வழங்க மொழியின் அறிவு நமக்கு உதவுகின்றன.

10. சாப்பாட்டுக்குப் பின் பாலோ அல்லது பழமோ எடுத்துக்கொள்வது நல்லது.

## பகுதி III

6. சுற்றுலாத்துறை என்பது நமது நாட்டுக்கு வருமானம் உள்ள துறையாகவிருந்தபோதும் எமது நாட்டின் கலாசார சீரழிவுக்கு முக்கிய காரணமாகவும் அமைந்துவிடுகின்றது. எனவே, இவ்வாறான சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, தடுத்துநிறுத்துவதற்குரிய வழிவகைகள் பற்றிச் சுற்றுலாத்துறை அமைச்சருக்கு 150 சொற்களில் கடிதம் எழுதுக.

**7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

அ) பத்தி எழுத்துக்கள்

ஆ) சமூகக் கிளைமொழி

இ) ஆய்வுச்சுருக்கம்

ஈ) தராதரத் தமிழ்நடை

உ) ஜனரஞ்சக எழுத்து